உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி க.	நளஸு மார்கழிமீ 1916ஸு டிஸம்பர்மீ	பகுதி கக.

புதல்வர் கடமை.

(285–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கஞ்சி வார்க்கும் ஓடு காணாமற் போனதன் நிமித்தம், சிறிதேனும் பழிபாவத்திற் கஞ்சாது, தன் தகப்பனை, மனைவியுடன் சேர்ந்துகொண்டு குறுந் தடி கொண்டு மொத்திய வெறுந தடியன் ஒருவன், தனது மகனால் நல்வழிப்பட்ட விஷயம் பலர் அறிந்திருக்கலாம். ஆயினும் அவ் விஷயத்தை, இதுகாறும் அறியாதார் அறியவும், அறிந்தார் மறவாது என்றும் ஞாபகத்திருத்தவும்; நாம் இவ்வியாசத்தில் மற்றும் ஒரு முறை கூறப் போகிறோம் என்று அறிந்தே,(எம்முடன் சேர்ந்து 'விதயபாநு'வை நடத்திவந்தவரும், எமது ஆருயிரனைய சீரிய நண்பருமான) ஸ்ரீ: மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள், முன்பே, எமக்கு உபயோக மாகும்படி பின்வருமாறு எழுதி வைத்துள்ளார்; ('நற்கவிப் புலவர் தீர்க்க தரிசியும் ஆவர்' என்பது பொய்யாதன்றோ?) அவ்விஷயம் வருமாறு:—

ஒருவன் மனைவி சொற் கேட்டு, மயங்கிய மனத்தனாகி, வயது முதிர்ந்த தன் பிதாவைச் சிறிதும் மதியாதவனானான். அவரது முதுமைப் பருவத் தோற்றத்தைக் கண்டு அருவருத்துத் தன்னுடன் வைத்துப் போஜனம் செய்யவும் சகியாமல்; ஒரு ஓடு கொடுத்து,

அவ் ஓட்டில் வார்க்கும் கஞ்சியைப் புறத்தே வைத்துக் குடித்து ஒதுங்கி யிருக்கச் செய்தான். கைப்பொருள் அனைத்தையும் புத்திரனுக்கு அளித்து, கைகால் வலிமை குன்றி, கண்ணொளி குறைந்து காதறிவு இழந்து, வாயொலி மழுங்கித் தள்ளாடி இருக்கும் கிழவன் யாது செய்வான்? அந்தோ! பரிதாபம்! கொடிய புத்திரனது கடுஞ் சொற்களைக் கேட்டுக் கொண்டு, வெட்கத்தையும் விடுத்து, வயிற்றுக் கஞ்சியையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இங்ஙனம் இருக்கையில், இக் கொடியோனது குமாரன் ஒருவன், இவ்வநீதியைக் கண்டு சகியாதவனாகி, மனம் புழுங்கி எப்படியாவது தன் பாட்டனுக்குக் கஷ்ட நிவர்த்தி செய்யவும் தந்தைக்குப் புத்தி கற்பிக்கவும் நினைத்தான்: ஒருநாள் தன் பாட்டனது உண்கலமாகிய மண் கலத்தை எடுத்து அவன் ஒளித்து வைத்து விட்டான். போஜன காலத்தில் கிழவன் ஓட்டைத் தேடி, அதை வைத்த இடத்திற் காணாது வருந்தி, 'மகனும் மருகியும் யாது கூறுவார்களோ!' என்று அஞ்சி நின்றான். இதற்குள் மகன் வந்து, "ஏ! கிழவா! ஓட்டை யெடுத்து வந்து கஞ்சி வாங்கிக் கொள்ளக் கூட ஒழிய வில்லையா? சீக்கிரம் வந்தாலொழியக் கஞ்சி கிடையாது" என்று அதட்டி இரைந்தான். அவன் மனைவியும் அதற்குப் பல்லவி பாடினாள். உடனே, கிழவன், இடியேறுண்ட நாகம் போல் ஏங்கி, தள்ளாடிக் கொண்டு வந்து "அப்பா! ஓடு களவு போய் விட்டது. தேடித் தேடிப் பார்த்தேன். அகப்பட வில்லை" என்று அழுது கொண்டே மொழிந்தான். மகனுக்குக் கடுங்கோபம் பிறந்தது. "கிழட்டுச் சனியனே! உனக்கு யார் தினம் ஒரு ஓடு அழுகிறது? கொடுத்ததைப் பத்திரமாக வைத்துக் கொள்ளக் கேடென்ன?" என்று வெடு வெடுத்துக் கூறிக் கைத்தடி கொண்டு அடித்தான். கிழவன் அடிபொறுக்க மாட்டாமல் அழுது இரைந்த பொழுது, அடித்தவனது மகன் ஓடி வந்து, தந்தையை நோக்கி, "அப்பா! என் பாட்டனை அடியாதே. அவ்வோட்டை நானே எடுத்து வைத்திருக்கிறேன்" என்றான். தந்தை பல்லிளித்து, "அட! மூடா! நீ அதை எதற்காக அடா எடுத்தாய்?" என்ன, அவன், "அப்பா! இன்னும் கொஞ்ச நாளையில் நீயும் கிழவனாய் விடுவாய். அப்போது 'நாம் வீணாகக் காசு செலவழித்து ஏன் ஒரு புது ஓடு உனக்கு வாங்கித்

தரவேண்டும்' என்று நினைத்து அதைப் பத்திரப்படுத்தி விட்டேன்'' என்றான். உடனே தந்தையை அடித்த தறிதலை முகம் மாறிச் சின ந்து, ''பயலே! என்ன சொன்னாய்! எனக்கும் ஓடு கொடுக்கப்போகி றாயா?'' என்று அதட்டினன். அதற்குச் சிறுவன் சிறிதும் அஞ்சாது ''ஏன் அப்பா! கோபித்துக் கொள்ளுகிறாய்? நீ உன் பிதாவுக்கு எவ்வளவு மரியாதை வைத்து அவரைக் காப்பாற்றுகிறாயோ அவ் வளவு தானே உன் பிள்ளையாகிய நானும் உனக்குச் செய்வேன். நீ என்னை இதற்காகக் கோபிக்கவாவது வருந்தவாவது நியாயம் இல் லையே!'' என்று வெகு மரியாதையாகக் கூறினன். உடனே துஷ்ட னுக்கு நற்புத்தி வந்தது. பிதாவை வணங்கித் தான் அது வரை அவர் பால் செய்துள்ள பிழைகள் யாவையும் பொறுத்தருளுமாறு வேண்டித் தன் புத்திரனை வியந்து முத்த மிட்டு நன்றி பாராட்டி னன். அன்று தொட்டுத் தந்தையைத் தெய்வமாகவே பாவித்து அவர் பால் வெகு மரியாதையுடன் நடந்துவந்தான்'' என்பதே.

தந்தையின் தாழ் நிலையின் நிமித்தம் அவரைத் 'தன் தந்தை' என்று சொல்லிக் கொள்ள வெட்கி,''வீட்டுப் பரிசாரகன்'' என்றும், ''பூஜை செய்பவன்'' என்றும் வாய் கூசாது இகழ்ந்து அவமானத் திற் குள்ளாகிய ஓர் அற்பனது அடாத செய்கையும் ஞாபகத்திலிருத் தத் தக்கதே.

தாய் தந்தையர்க்கு உரிய, ''மரியாதை'', என்னும் இவ்விஷய த்தை முடிக்க நாம் எண்ணியிருக்கும் இச்சமயம், எமது ஆப்த நண் பரும், சிவகங்கை ஸம்ஸ்தான வித்துவானுக விளங்கினவருமான (காலஞ்சென்ற) பிரமஸ்ரீ வில்லியப்பப்பிள்ளை என்பார் இயற்றிய ''திருமுகவிலாஸம்'' என்ற நூலில் உள்ள ஓர் விஷயம் நம்ஞாபகத் திற்கு வருகிறது. பிறரை வஞ்சித்துப் பெரும் பொருள் ஈட்டிய தட்டான் ஒருவன், ''பெண்டாட்டி யாத்தாள பெரிய ஆத்தாள்'' எனக் கொண்டு, அவள் சொற்படி எலலாம் நடந்து, தன்னைப் பரி வொடு பெற்று வளர்த்த கிழத்தாயை, தன்மனைவிக்காகப் பரிந்து நிந்தித்து அவமதித்து அடித்துத் துரத்தியதைப் பற்றியதாகும் அது. அக்கதை வருமாறு:

தன்னை அவமதித்து உபத்திரவப் படுத்தி வரும் மருமகளுக் கும் அவளைச் சேர்ந்தார்க்கும் ஆடையணி உணவாதிய சம்பிரம

மாக அளித்துத் தன்னை வாடைக்காற்றில் போகிய ஆடையின்றி விடுத்த, தன்மகனது பேதைமைக் கிரங்கியும், மருமகளது கொடுமையை நினைந்தும், அக்கிழம்படு தாய்,

சாடையிலே பார்த்து,மகன் தன்பால் நெருங்கி "இந்த
வாடையிலே நான் கிடந்து வாடையிலே,—'லேடி'யிவள், (1)
அஞ்சனமைக் காரி, அதிபசுப்புக் காரி,மகா
பஞ்சரிப்புக் காரி, பயில்க்காரிக்(கு)—அஞ்சி, அந்த (2)
நாச்சியா ருக்குமட்டும் நல்கினையே! நான் இருக்கும்
காட்சியை நீ கண்ணாரக் காண்கிலையோ?—வாய்ச்ச நெடுங்(3)
கால(ம்), மக வில்லாமற் கன்றிஉன(து) அப்பனொடு
சாலவும்யான் ஏகித் தலங்கள்சுற்றி—மேலெனவும் (4)
கண்டகண்ட கோவிலுக்குக் காணிக்கை தான்செலுத்தி
அண்டரிய தீர்த்தங்கள் ஆடிவந்தும்—தொண்டர்களாம் (5)
ஆண்டிபர தேசிகளுக்(கு) அன்னம் படைத்து(ம்), மிக
நீண்டஅர சக்குளிதம் நீர்வார்த்தும்—தேண்டரிய (6)
தீக்கைஉப தேசமுற்றும் சேனைவிர தம்புரிந்தும்
ஊக்கரிய கர்ப்பம் உறலானேன்.—ஆக்கையினில் (7)
பச்சைநரம்(பு) எய்தமதி பத்தும் சுமந்(து) நிறைந்(து)
ஒச்ச(ம்)அறப் பெற்றேன் உனைமணிபோல்.—செச்சைநறு (8)
நீராட்டித் தாராட்டி நீ(டு)அம் புலிகாட்டிப்
பாராட்டிச் சீராட்டிப் பாதுற்றேன்.—ஓர்வேளை (9)
நோய்அணுகக் காணில்மனம நோனா(து) ஒருமருந்துக்
காய்,அடவி தோறும் அலைந்துழந்தேன்.—ஓயாமல் (10)
எத்திறத்தும் பட்டேன், இராப்பகல்ஓர் போதினுங்கண்
நித்திரைசற் றுண்டா? நினைவுண்டா? முத்(து)அனையாய்! (11)

---

1. வாடை—வடகாற்று, வாடையிலே—வாடுகையில்.
2. பஞ்சரிப்புக்காரி—உபசாரமாய்ப் பேசுபவள், பயில்காரி — ஜாடைசைக்கினையாகப் பேசுபவள்.
6. தீண்டரிய—தேடுதற்கு அருமையான.
7. தீக்கை—தீக்ஷை, சேனை—மிகுதியான, ஆக்கை—சரீரம்.
8. செச்சை—வாசனைப்பொடி.
9. அம்புலி—சந்திரன், பாதுற்றேன்—காத்தேன்.
10. நோனாது—சகியாமல், அனையாய்—போன்றவனே!

நீபிறந்(து)ஓர் ஆண்டு நிறை(வு)உறு முன்உந்தை
தீபறந்த காட்டினிடைச் சென்(று)எரிந்தான்—சோபமுற்று
வண்ணக் கலைஇழந்த மான்போல், ஒளி மழுங்கி
மண்ணிற் படிந்த மணியே போல்,— பெண்மைக்(கு) (13)
உரிய நிறைதவறா(து) ஊழியத்திற் புக்(கு) உண்டு
அரியபல கஷ்டம அடைந்தேன்—இரு நிலத்தில் (14)
உற்றாருக்(கு) உற்றார் உறவேமற் றல்லது,கை
யற்றார்க்(கு)உதவி அன்பிங்(கு) உண்டோ?—பெற்றாள் (15)
இருந்தும் பயன்இலதால் 'எவ்வுயிரும் காக்கும்
பரம்பொருளே தஞ்சம்' எனப் பற்றி—வருந்திஉனைப் (16)
பொன்னால் அலங்கரித்துப் போஷித்(து) அனுதினமும்
மன்னர் மக்கள் போலும் வளர்த்தேனே!—தென்மொழியும் 17
ஜாதித் தொழிலு(ம்)வெகு தந்திரமும் மந்திரமும்
போதித்து வைத்தனர்நம் புண்ணியர்கள்.—காதல்! நீ (18)
எண்ணும் சிறுபருவத் தேகன் மணமுடித்துக்
கண்ணாற் களித்துக் கதிபெறுவான்—எண்ணி யெண்ணி (19)
எத்தனையோ பெண்அமைந்தும், என்உளம் ஒப்பாமற்சொந்
தத்தி(ல்) இவள் சாத்திமகளாதலால்—(மொத்தை, இரு (20)
நான்குவரு ஷம்சமைந்து நாற்றமெடுத் துக்கிடந்தாள்
நீங்கரிய மூளி நிறங்கெட்டாள்)—யான்கருத்தாற்(று) (21)
அன்னே! பெண்! பாவம்! இவட்(கு)ஆதாரம் வே(று)இலை.நம்
சொன்னபடி கேட்கும் சுகிர்த(ம)உண்டாம்-பின்னடியிற்(22)
பெண்ணடியில் லாநமக்குப் பின்தளர்ந்த காலமதில்
உண்ணொடியா(து),ஒட்டும உதவு(ம்)'என்றும்,—பெண்ணீர்
அணைகிடந்த நீலிக்(கு) அழகில்லா தேனும்
குணம் இருந்தாற்போது'மெனக் கொண்டு—துணிபுறநான்(24)
வேணுமென்று கொண்டு வந்த வெங்கஞ் சிறுக்கிமகள்
ஆணவமாய் என்னை அவமதித்தாள்.—கோணிமனம் (25)
நாணித் தலைகவிழ நாவெடுத்துப் பேச வொட்டா(து)
ஆணித் தரமாய் அடக்கி விட்டாள்—வீணி(ல்) அவச் (26)
சேட்டையுறப் பேசித் தெருவிலுள பேர்க(ள்) தமைக்
கூட்டமிட்(டு) என்குட்டைக் குலைக்கிறாள்.—கோட்டிகொண்ட

12. உந்தை-உன் தந்தை.
13. வண்ணக்கலை-அழகிய ஆண்மான்.
27. கோட்டி கொண்ட-பரிகசிக்கத்தக்க.

நாயினுங்கே(டு) ஆனேன். ஓர் நாளேனும் 'அத்தை' என்று
வாய் குளிரச் சொன்ன வசனமுண்டா?—பேயு(ம்) அஞ்சக் (28)
காத்திரி விக்கோலம் காட்டிஅவள் ஆடுகின்ற
கூத்துக்கு மத்தளம் நீ கொட்டுகிறாய்—'ஆத்தாள்; என் (29)
அன்புடையாட்(கு) என்நீ அடங்கிடந் தாயிலை? என்(று)
என்(பு) ஓடியத் தீட்ட நின்றால் எலாதே?—'வன்(பு)உரையாய்
ஏண்டிஅகங் கார(ம்)? உனக் கிவ்வளவா?' என்று புடைத்(து)
ஆண்(டு) அடக்கி னால்அலவோ அஞ்சுவாள்?—ஈண்(டு)எதிர்நீ
பார்த்திருக்கப் பேசும் பழிப்புரையைக் கேட்டு(ம்) ஒரு
வார்த்தைகண்டிப் பாய்சொலவும் வாயிலையே—சேர்த்த (32)
'மனையாளை மஞ்சத்தில்; மைந்தர் தமை நெஞ்சில்;
வினையாளை வேலை முடிவில்'—எனமுதியோர் (33)
தக்க உரை தேர்ந்தும் 'சரணம்! சரணம்!' என்றே
விக்கிஅவள் கால்அடியில் வீழ்கின்றாய்—எக்குலத்தி (34)
லானாலும் உன்போல் அறிவிலரைக் காணேன். நீ
தானாபெண் கொண்டாய் இத் தாரணியில்?—மேனாள் ஓர் (35)
வண்ணாரப் பையல், மனையாள் தனைக்குறித்(து)அன்(று)
'எண்ணா(து) ராமனையே என்சொன்னான்?—கண் உறுக்கும் (36)
நாட்ட(ம்)அவள் கண்டு நடுநடுங்க வேண்டாமா?
ஓட்டைஎனக் கால்வழிநீர் ஓடாதா?—சேட்டைபண்ணித் (37)
தாங்குவதா னால்உன் தலையில்மிள காய்அரைத்துத்
தீங்கரிய சட்டம் செலுத்துகிறாள்—ஈங்கிவள்தன் (38)
நாக்கை இழுத்து நறுக்கினால் அன்றோ, என்
தீர்க்க வயிராக்ய சினம் தீரும்?—ஏற்கையில் நீ (39)
சன்னதம்கொண் டாடத் தலையணைபின் மந்திரத்தால்
என்னவிதம் சொல்லி உரு ஏற்றினளோ?—பொன்னினுநற் (40)
றாயவளா?' என்றுபச்சாத் தாபமின்றி, நேற்றுவந்தாள்
மாயையிலே வீழ்ந்து மயங்கினையே!—தீயர்களும் (41)
ஏச இடங்கொடுத்தாய். என்செய்வாய்! யானும் அதைப்
பேசுவதில் என்ன பெறப்போறேன்?—பீசில் உனக்கு (42)
ஆறுமுழம் தான்பெரிதோ? அப்பா! நீ நல்கி(ல்) எனக்(கு)
ஆறுமுளம்—'' என்றாள்

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

---

30. வன்புஉரையாய்—கடின மொழி கூறாதே.
42. பீசில்—மல்துணியில்.

திருவையாறு.

"கங்கையிற் புனிதமாய காவிரி"யாறு பாய்வதால், நீர்வளமும் நிலவளமும் குன்றாத திருவையாறு, இக்லோக வாழ்வையும், பரலோகவாழ்வையும் அளிக்கும் திவ்ய க்ஷேத்திரங்களில் ஒன்று. தருமதேவதை பூஜித்துத் திருநந்தி தேவராகிச் சகல வைபவங்களையும் பெற்றதாம் இத்திவ்ய க்ஷேத்திரம். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் காவிரி வெள்ளத்தைத் தடுத்துத் தரிசித்ததும் இத்தலமே யாகும். இந்த ஸ்தலம் சமயாசாரியர் மூவர் தேவாரமும், ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திர வெண்பாவும், ஓதப் பெற்றதாகும். இது தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே சுமார் 8-மயில் தூரத்தில் காவிரியின் வடகரையி லுள்ளது.

தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு வடவாறு, வெண்ணாறு, குடமுருட்டி, முதலிய ஆறுகளைக் கடந்து அப்பாற் சென்றால், காவிரியாறு தோன்றும். அதன் கரையில் ஓர் பெரிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கின்றது. இதுதான் "கல்யாண மஹால்". காவிரியாற்றின் பாலத்தின்மேல் நின்று கொண்டு இக்கட்டிடத்தை நோக்குவோமாயின், அது மனத்திற்கு வெகு சந்தோஷத்தை விளைவிக்கும். இக்கட்டிடத்தின் பின்புறம் காவிரியாற்றுக் குள்ளும் கட்டப்பட்டிருப்பதும், ஆற்று நீரானது அதைச் சுற்றி மெதுவாய்ச் செல்வதும், பார்ப்பவர் கண்களுக்கு ரம்யமாயிருப்பதோடு ஆநந்தத்தையும் விளைவிக்கும். இம் மஹால் மரமடர்ந்த ஒரு சோலைக்குள் அமைக்கப்பட்டுளது. 1821-ஆம் வருஷம் தஞ்சாவூரையாண்ட "ஸரபோஜி" மஹா ராஜாவால் கட்டப்பட்டது. இதிற்றான் அவர் தம் 14 மனைவிமார்களையும் கல்யாணஞ் செய்து கொண்டாராம். அவர் இறந்த பிறகு, அவருடைய வம்சத்தவர்கள் இம் மஹாலை மேற் பார்த்து வந்தனர். தற்போது, சத்திரம் இலாகா அதிகாரிகளால் அது மேற்பார்க்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது ஸம்ஸ்கிருத கல்லூரி ஒன்று ஸ்தாபனஞ் செய்யப்பட்டு அதில் நடைபெற்று வருகின்றது. தகுந்த வித்வான்களைக் கொண்டு தர்க்கம், சாஸ்திரம், வியாகர்ணம் முதலியன அந்தணர்க்கு மட்டு

மன்றிப் பிறர்க்கும் கற்பிக்கிறார்கள். இதிற் பயிலும் மாணாக்கர்கள் துரைத்தனத்தாரால் நடத்தப்படும் (Oriental title Examination) என்ற வித்வான் பரீக்ஷைகளுக்கு வருஷந்தோறும் அனுப்பப்பட்டு வருகின்றார்கள். இக் கல்லூரியில் ஸம்ஸ்கிருதத்தைத் தவிர ஆங்கில மொழியும் நம்தாய் மொழியாகிய தமிழும் கற்பித்துக் கொடுக்கப் படுகின்றன. அக்கலாசாலையில் ஒரு புத்தகசாலை இருக்கின்றது. அங்கே அநேக ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும், கொஞ்சம் ஆங்கிலப் புஸ்தகங்களும், அவற்றினும் குறைந்த தமிழ்ப் புத்தகங்களு மிருக்கின்றன. ஆங்கிலங் கற்றுக் கொடுக்கும் பள்ளிக் கூடங்கள் போலவே இக்கல்லூரியும் நடைபெற்று வருகின்றது. இக்கட்டிடம் மூன்று உப்பரிகை கொண்டது. கீழே நிலாமுற்ற (Court-yard) மும் அதைச் சுற்றித் தாழ்வாரமும்; அதற்குள் அநேக அறைகளுமிருக்கின்றன. இவ்வறைகளே வெளியூரிலிருந்து வரும் மாணாக்கர்கள் தங்குமிடம். மாணவர்களுக்குத் தர்மசொத்திலிருந்து உண்டி முதலியன அளிக்கப்பட்டு வருகின்றன. இத்தாழ்வாரத்திற்குப் பின்புறம் காவிரியாற்றில் இறங்கி ஸ்நானஞ் செய்யும் பொருட்டு வசதியான படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

கீழ்க் கட்டிடத்திலிருந்து மேலே செல்வதற்கு இரண்டு படிக்கட்டுகளிருக்கின்றன. மேல் மாடியில தலைமை உபாத்தியாயர் இருப்பிடமும், புத்தகசாலையும், வெவ்வேறு வகுப்புக்களுமிருக்கின்றன. செங்கற் றூண்கள் மேல் நிறுத்தப்பட்ட வளைவுகள் மேல் இக்கட்டிடம் அமைக்கப் பட்டிருக்கின்றது. இதைக் கட்டி வெகு காலமாய் விட்டபோதிலும், தூண்களும், சுவர்களும், வெகு பளபளப்பாயும், வழுவழுப்பாயு மிருக்கின்றன. மதுரையில் உள்ள "திருமலை நாயகர் மஹால்" அமைப்பில் மரமாவது இரும்பாவது சம்பந்தப் படாதிருத்தல் போல, இக்கட்டிடத்திலும் அவைகள் சம்பந்தப்படவில்லை. இக்கட்டிடத்தில வருஷந்தோறும் தைமீ 'தியாகராஜ ஸ்வாமிகள்' ஞாபகச்சின்ன மகோத்ஸவம் தென் இந்தியாவிலுள்ள பிரபல சங்கீத வித்வான்கள் ஆதரவில் நடைபெறும்.

இவ்விடம் விட்டு வெளிச் செல்வோமாயின், எதிரே திருக்கோயிலுட் செல்லும் வாசலும், அதற்கு முன்புறம் ஆட்கொண்

டாரின் திருச்சந்நிதானமுந் தோன்றும். ஆட்கொண்டாரது வைபவத்தைப் பற்றிப் பின் வருமாறு சொல்லுகிறார்கள். மார்க்கண்டனென்ற ஓர் அந்தணச் சிறுவன் தினந்தோறும் காவிரியில் மூழ்கிப் பூவெடுத்து வந்து பரமசிவனை அர்ச்சித்துப் போவது வழக்கமாம். அப்படியே ஒருநாள அவன் கோயிலை நோக்கி வரும்பொழுது, ஊழ்வினையால் அந்திய காலம் கிட்டவே, எமன் அவனுயிரைக் கவர்ந்து செல்ல மார்க்கண்டனை நெருங்கினனும். அப்பொழுது அடியார்க்கெளியனான பரமசிவன், தனது பக்தனைக் காப்பாற்றும் பொருட்டு இலிங்கத்தினின்றுந் தோன்றி எமனது கண்களை இருளடையும்படி செய்தனராம். பிறகு தேவர்களின் வேண்டுகோளின்படி, எமனுக்குக் கண்களைக் கொடுத்து, மார்க்கண்டனை எமவாதையினின்றும் தப்புவித்ததுமன்றி, திருவையாற்றில் மரணமடைகின்றவர்களுக்கு எமவாதை இருத்தல் கூடாதென்று வாக்களித்தனராம். ஆகலால் இப்பொழுதும் இப்புண்ய க்ஷேத்திரத்திலிறப்பவர்களுக்கு அக்கொடிய எமவாதையில்லையென்பது புராண கதை. இன்றைக்கும் அநேகர் வெவ்வேறு இடங்களிலிருந்து தங்கள் அந்தியகாலத்தில் திருவையாற்றிற்கு வந்து மரணமடைகிறார்களாம். நிற்க.

ஆட்கொண்டாரின் திருச்சந்நிதானத்திற்கு முன் ஓர் பெருங்குழி வெட்டப்பட்டிருக்கின்றது. இதனுள் குங்கலியம் வாங்கிப் போடுகின்றவர்களுக்குத் தேள், நண்டு வாய்க்காலி முதலிய விஷப்பூச்சிகளினால் உபத்திரவம் ஒன்றுமிராதாம்.

ஆட்கொண்டார் சந்நிதானத்தை விட்டு உள்ளே சென்றால் கோவிலின் வெளிப் பிரகாரமும திருக்குளமும் தென்படும். திருநாவுக்கரசு சுவாமிகள் என்ற அப்பர், தென்கைலாயக் காட்சி கண்ட இடம் இப் பிராகாரத்தில் ஒருபாகத்திலிருக்கின்றது. அங்கே ஒரு சிறுகோவிலும், அதற்குள் ஒரு இலிங்கமும, அப்பரின் சிலையுமிருக்கின்றன. அவ்விடத்திற்றான் பரமசிவன் ஆடி அமாவாசையன்று அப்பருக்கு மோக்ஷங் கொடுத்தாராம். திருக்குளத்தின் பெயர் "சூர்யபுஷ்கரணி".

உள்ளே சாக்ஷாத் ஜெகத் ஜோதியாய் விளங்கிக் கொண்டிருக்கும் 'பஞ்சநதீசுவரன்' என்றும், 'பிரணதார்த்திஹரான்' என்

றும், 'செம்பொற் ஜோதீசுவரன்' என்றும், பலதிருநாமங்களைக் கொண்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். உட் பிராகாரத்தில் பல தேவதைகள் கோயிலும், ''மஹா லக்ஷ்மி'' தீர்த்தம், என்ற ஓர் கிணறும் இருக்கின்றன. இத்தீர்த்தத்தில் நீராடியவர்களுக்குச் சர்வ பாப விமோசனமாம். மேலும் ''சங்கா தோஷம்'' என்று சொல்லப்பட்ட பேய்க் கோளாறு உள்ளவர்கள் இக்கிணற்றில் மூழ்க, சுகம் பெறுவார்களாம்.

ஸ்வாமி கோவிலை அடுத்து, ஜகன் மாதாவாகிய "தர்மஸம்வர்த்தனி" என்ற 'அறம் வளர்த்த நாயகி' யின் சந்நிதானம் காணப்படும். அங்கே த்வஜ ஸ்தம்பத்தினடியில் ஓர் விநாயகரின் சிலை இருக்கின்றது. ஒருவன் தான் நினைத்த காரியம் கைகூடுமா, கூடாதாவென்று தெரிந்து கொள்வதற்குக் கணபதியைமனதில் தியானஞ் செய்து கொண்டு, அவ்விக்நேசுவரரின் பாதத்தில் தன் னிருகைக் கட்டை விரல்களையும் பிரித்து வைத்தால், காரியம் சித்திபெறுமாயின், பிரித்து வைத்த விரல்கள் ஒன்று சேருமாம்; அன்றேல், கூடாவாம்.

கோயிலுக்கு வெளிப்புறத்தில் "மடவளாக்கள்" என்று சொல்லப்பட்ட சிறு வீதிகளும், அவைகளுக் கப்பால் பெரிய வீதிகளு மிருக்கின்றன. இத்தெருக்களில் தான் உற்சவ காலங்களில் ஸ்வாமியின் ரதமும் மற்ற வாகனாதிகளும் செல்வது வழக்கம். மேலும், வருஷத்திற் கொருமுறை "ஸப்தஸ்தானம்" என்ற திருவிழா சித்திரை மாதம் நடைபெறுகின்றது.

இவ்வூரில் 'நல்ல தண்ணீர்க் கிணறு' என்று ஓர் கிணறு இருக்கின்றது. அதைச் "சந்திக்கிணறு" என்றும் சொல்வார்கள். இக்கிணற்றின் நீரை ஊர் ஜனங்கள் பருகுகின்றார்கள். ஆடிமாதம் 18-ம் பெருக் கன்று இக் கிணற்று நீர் பொங்கி வழியுமாம். கங்கை நீர் ஆட விரும்பிய மகான் 'ஐயாவாள்' என்பவர் பொருட்டு உற்பத்தியானதாம்இது. அவரது விருப்பிற் கிணங்க அத்தினம் அங்குற்ற கங்கை அவரது ஞாபகார்த்தமாகப் பிரதி வருஷமும் தன் நீரைப் பொங்கி வழியச் செய்கின்றாளாம்.

இவ்வூர் ஓர் "பூனியன்". தெருக்களில் இராக் காலங்களில்

ஜனங்கள் தடமொறும்ற் செல்வதற்குப் போதுமான தீபங்கள் கிடையா. வீடுகளினின்றும் செல்லுகின்ற கழிவு ஜலத்தை அப்புறப் படுத்துவதற்குத் தகுந்த "சாக்கடைகள்" கிடையா. இக் காரணமாக அங்கு ஏராளமான கொசுகுகள் உண்டாகின்றன. அவை ஜனங்களைக் கடிப்பதால், இரத்தம் அசுத்தப் பட்டு "யானைக்கால்" என்ற பெரு நோயினால் பீடிக்கப் பட்டு வருந்துகின்றார்கள் அங்குள்ளோரிற் பலர்.

மேற் கூறிய இடங்களைத் தவிர "சென்ட்ரல் ஹைஸ்கூல்" என்ற ஓர் உயர்தரக் கலாசாலையும், டிப்டி தாசிலதார் ஆபீசும, முனசிப் கச்சேரியும், லோகல்பண்டு வைத்திய சாலையும, "சாரதா விலாஸ சன்மார்க்க சபை" என்ற ஓர் தமிழ் அபிவிருத்தி சங்கமும் இருக்கின்றன.

பெ. வே. மீனாக்ஷிசுந்தரம்.

கமலாவதி.

அங்கம்-3.

காட்சி-2.

இடம்.—கேகயநாட்டு அரண்மனையிலோர் பாகம். காலம்.—இரவு.

[கமலாவதி ஓர் மஞ்சத்தின்மீது சாய்ந்த வண்ணம் தனக்குள்]

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பெரியோர் வாக்கு ஒருக்காலும் பொய்க்காது கடவுளே! உன் செயலை அறிவார் யார்? என் பேரிலும் உனக்குக் கிருபை இருந்ததே! உன் கிருபை யில்லா விட்டால், அம்மஹாநுபாவரை நான் மணந்து கொள்ள, என் தந்தை சம்மதிப்பாரோ?

[வீரன் மாறு வேடத்துடன் பிரவேசிக்கிறான்.]

யார் அது? எங்கே வந்தாய்?

வீர. அம்மணி! இதெ ஒங்க கிட்டெ கொடுக்கலாம்னு வந்தேனுங்க. யாரோ தெரியலே ஒத்தன், மாளவதேசத்திலேருந்து வந்தேன்னு சொன்னானுங்க. இந்தக் கடுதாசியையும், மோதரத்தையும், அம்மாங்க தனியாயிருக்ரப்போ, கொடுக்கணும் இன்னு கொடுத்துட்டுப் போயிட்டானுங்க.

[ஒரு நிருபத்தையும், கணையாழியையும் கமலாவதியினிடம் கொடுக்கிறான்.]

கம. யாரடா நீ? இந்த அரண்மனையில் புதிதாகவேலைக் கமர்ந்திருப்பது நீதானோ?

வீர ஆமாங்க, அம்மணி!

கம. சரி, நீ போகலாம்.

[போகிறான். கமலாவதி நிருபத்தைப் படித்துப் பார்க்கிறாள்.]

“கண்மணி! நமது விவாஹம் நிறைவேறுவதற்கு முன்பாக, ஒருதரமாவது நான் உன்னைத் தனிமையாகச் சந்திக்க விரும்புகின்றேன். எப்பொழுது, எவ்விடத்தில் சந்திக்கலாமென்பதை இந்நிருபம் கொண்டு வரும் தூதன் மூலமாக நீ எனக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேன். இந்நிருபம் என்னுடையதே என்பதற்கடையாளமாக, நீ எனக்களித்த அருமைக் கணையாழியையும் இத்துடன் அனுப்பியிருக்கின்றேன்.

உன் அன்பான பதிலை
எதிர்பார்த்த வண்ணமாக இருக்கும்
ஸ்ரீதரன்”

என் காதலரை மறுபடியும் சந்திக்கும்படி நான் என்ன பாக்கியம் செய்தேனோ? எனக்கு நம்பிக்கையேற்படும்படியன்றோ இக்கணையாழியையும் என்னிடத்தில் அனுப்பியதாக அவர் வரைந்திருக்கின்றார். ஆ! என்ன அன்பு! (சற்று தாமதித்து) நான் அவரை இன்ன இடத்தில் இப்பொழுது சந்திப்பதென்று, அவருக்கு இப்பொழுது எப்படி அறிவிப்பேன்! சீக்கிரத்தில் வீரன் மூலமாகவே பதில் அனுப்பிவிடுகிறேன்.—உம்—அது தான் சரி. [போகிறாள்.]

காட்சி முடிகின்றது.

அங்கம்-3.

காட்சி-3.

இடம்.—மோஹனனின் சயனக் கிருஹம். காலம்.—இரவு.

[இரண்டு கொலையாளிகள் வார்த்தையாடிக்கொண்டிருக்கிறார்கள்.]

கொ-1. அடே ராணிங்க, வந்துட்டா என்னடா பண்ரது?

கொ-2. அடே! அதெப்பத்தி நம்ப கவலெப்பட வேண்டாம்டா! ராணிங்க இங்கே வராதபடி பாத்துக்கரேன்னு கொரே சேனரு சொல்லியிருக்காருடா!

கொ-1. சரி, அப்படின்னு பெரிய மாராசா வந்த வொடனே, நம்ம காரியத்தெ முடிச்சுப்பிட்டு நம்ம ஓடா வேண்டியது தான்.

[சயனக்கிருஹத்தின் பலகணி வழியாக வீரன் எட்டிப் பார்க்கிறான்.]

அடே! அந்தோ பாருடா! வீரன் அந்தச் சன்னல் வழியா எட்டிப் பாத்துக்கிட்டு நிக்கான்!

வீர. அடே! பெரிய மாராசா வந்துக்கிட்டு இருக்குறாரு—உம்—என்ன? வந்ததும் காரியத்தெ முடிச்சுட்டு இந்த சன்னல் வழியா ஏறிக் குதிச்சு ஓடியாந்தாங்க நீங்கரெண்டு பேரும் எங்க எசமான ஒங்க ரெண்டு பேருக்கும் வேணும்கர மட்டும் எனம் குடுத்து அனுப்பிச்சுப் பிட்ரேன்னு சொன்னாரு.

கொ-1,2 சரி, அப்படியே செய்ரோம்.

[வீரன் செல்ல, கொலையாளிகள் ஒருபுறமாக மறைந்து கொள்கிறார்கள். சற்றுநேரத்திற் கெல்லாம, வசந்த சேனன் பிரவேசிக்கிறான்.]

வ. (தனக்குள் நான் இங்கு வரும் பொழு தெல்லாம் என்னைப் பிரியமாக வரவேற்பது, என் காதலியினுடைய வழக்க

மன்றோ அப்படியிருக்க, இன்று மாத்திரம், எங்கே என் காதலியைக் காணோம்? இருக்கட்டும் உள்ளே சென்று பார்க்கின்றேன்.

[செல்லவும் திடீரென்று இரு கொலை யாளிகளும் வெளிப்பட்டு, தங்கள் வாளை வசந்த சேனன் மார்பிற்பாய்ச்சி பலகணியின் வழியாக எறிக்குதித்து விரைந் தோடுகிறார்கள். வசந்தசேனன் பூமியின் மீது சாய, சற்று நேரத்திற் கெல்லாம் ஓர்தாதி கரத்தில் பால்பாத்திர மொன்றைப் பிடித்தவண்ணம் பிரவேசிக்கிறாள்.]

தாதி. பாத்திரத்தை மேஜையின் மீது வைத்து, தனக்குள்]

ராணியவர்கள் எங்கு சென்றிருக்கலாம்?

[தற்செயலாய் வசந்தசேனனை நோக்கி, திடுக்கிட்டு]

ஆ! இதென்ன விந்தை! மஹாராஜா அவர்கள் இப்படி அலங்கோலமாக பூமியின் மீதுவிழுந்து கிடக்கக் காரண மென்ன?

[சமீபத்திற் சென்று]

ஹா! ஹா! ஐயோ! மஹாராஜா அவர்கள் எப்பாபிகளாலோ குத்துண்டல்லவோ, பூமியின் மீது வீழ்ந்து கிடக்கின்றார்கள்! மூச்சு இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லையே! நான் ராணியவர்களிடத்திற் சென்று, இதனைத் தெரிவிக்கின்றேன். [போகிறாள்.]

(காட்சி முடிகின்றது.)

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(288-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கல்லுமுரு குங்குழலிற் கண்ணன் மழலையே
வல்லதின்பம் நந்தர்க்கு வள்ளுவரே!—சொல்லிற்
குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர். (௬)

(அ-ம் முதலியன்):—வல்லது இன்பம்-இன்பம் தரவல்லது, நந்தன்-நந்த கோபன்: ஸ்ரீ கிருஷ்ணனது வளர்ப்புத் தந்தை, குழல் - புல்லாங் குழலின் இசை, யாழ்—வீணையின் இசை.

தேவகிக்கும் வசுதேவர்க்கும் பிறக்கும் எட்டாவது குமாரனால் தனக்கு மரணம் என்பதை அறிந்த கம்ஸன், அவ்விருவரையும் காவலில் வைத்து, அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்குந் தோறும் அக்குழந்தைகளைக் கொன்று வந்தான். ஆயினும் எட்டாவது குழந்தையாகத் தோன்றிய ஸ்ரீ கிருஷ்ணன் மட்டும், தனது விசித்திர சக்தியால் தப்பி, ஆயர்பாடியில் நந்தகோபன் என்னும் இடையன் வீட்டில் வளர லாயினன். குழலூதி ஆ நிரை மேய்க்கும் அவ்விடையனுக்கு ஸ்ரீ கிருஷ்ணனது மழலைச் சொல் அக்குழலிசையினும் பரமானந்தம் விளைத்தது என்பதையே ஆசிரியர் குறிக்கின்றார். வளர்ப்புத் தந்தைக்கே இவ்வளவு ஆநந்தமிருக்குமாயின், சொந்தப் பெற்றோர்க்கு எவ்வளவு ஆநந்தம் இயற்கையில் உண்டாகும் என்பதை ஊகித்து உணர்க.

எந்தைதொல் காப்பியனை என்னோ சமதங்கி
வந்தமுனிபாற் கொடுத்தான் வள்ளுவரே!—சிந்திப்பின்
தந்தை மகற்(கு) ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். (௭)

(அ-ம் முதலியன):—எந்தை—எங்கள் தந்தை (போல்பவனான),சமதங்கி—ஜமதக்நிமுனிவர், வந்தமுனி—தன்னிடம் வந்த அகஸ்திய முனிவர், பால்—இடத்தில், கொடுத்தான்—ஒப்புவித்தான், மகற்கு—மகனுக்கு, ஆற்றும்—செய்கிற, நன்றி—நன்மை: உதவி, அவையத்து—கற்றோர் சபையில், முந்தி—அக்கற்றோரினும் மேம்பட்டு, இருப்பச் செயல்—இருக்கும்படி செய்தலாம்.

திரணதூமாக்கினி முனிவர் என்ற இயற்பெயர் வாய்ந்த தொல்காப்பியர் தமது தந்தையாகிய ஜமதக்கி முனிவரால் அகஸ்தியர்பால் தமிழ் கற்குமாறு விரும்பி அனுப்பப்பட்டனர். இத்தொல்காப்பியர் அகஸ்திய முனிவர்பால் அருந்தமிழ அறிந்த மாணவர்கள் பன்னிருவரினும் முதல்வராயினர். இடைசசங்கம் இவரையே தலைமையாகக் கொண்டு நிகழ்ந்தது. இவர் இயற்றியுள்ள தொல்காப்பியமே தற்காலத்துள்ள முதற்றமிழ் நூலும் தொன்மைப் பேரிலக் கணமும் ஆகும். இவர் தமது ஆசிரியராகிய அகஸ்தியரினும் கல்வியறிவொழுக்கங்களில் தாழாது விளங்கியவர். இத் தொல்காப்பியரை உதாரணமாக எடுத்துக் கூறியது, நமது ஆசிரியரின் தமிழபிமானததை நன்கு விளக்குகின்றது. ஆசிரியருக்குத் தொல்காப்பியரிடம் பெரும் பற்று உண்டென்பது அவரது 'தொல்காப்பியப் பாயிர விருத்தி' முதலியவற்றாலும் அறியலாகும்.

> தன்னேர் வனசான்சீர் தாங்காக் கிரீடி, தற்கொல்
> மன்னுசுதற் கண்டுவந்தான் வள்ளுவரே!—என்னேயோ?
> தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (அ)

(அ-ம் முதலியன):—தன்நேர்—தனக்குச் சமானமாக வித்தையிற்சிறந்து விளங்கிய, வனசரன்—வேடன்: ஏகலைவன், சீர் தாங்கா—சிறப்பைக் கண்டு சகியாத, கிரீடி—இந்திரன் சூட்டிய கிரீடம் புனைந்தவன்: அர்ச்சுனன், தற்கோல்—தன்னையே கொன்ற, மன்னுசுதன் கண்டு – (வீரம்) பொருந்திய தன் குமாரனைப் பப்பிருவாகனனைக் கண்டு, உவந்தான்—மகிழ்ந்தான், தம்மில்—தம்மைக்காட்டிலும்.

தன்னேர் வனசரன் சீர் கிரீடி தாங்காமை:—செல்வம் மிக்க ஏகலைவன், என்ற வேடனொருவன், த்ரோணனிடம் சென்று, தனக்கு அஸ்திர சஸ்திர வித்தை பயிற்றுமாறு வேண்ட, துரோணன், சில காரணங்களால் முடியாதென்று விட்டான். ஆயினும் ஏகலைவன் மனந்தளராமல் துரோணனது உருவொன்றை வைக்கோலாற் செய்து, அதைத் துரோணனாக பாவித்து அதன் முன்னிலையில் நின்று, பக்தி பூர்வமாகவே துரோணனுக்குத் தெரிந்த யாவையும் கற்றுவிட்டான். துரோணனுக்கும், அவனது ஆசாரியனுக்கும் அர்ச்சுனனுக்கு மட்டும் தெரிந்த ஓர் அரிய ரஹஸ்ய வித்தையும் இவன் தன் பக்தி மிகுதியால் கற்றுவிட்டான். இவ்வித்தை முற்கூறிய மூவரைத் தவிர வேறெவர்க்கும் தெரியாதெனத் துரோணன் தன் ஒரே பிரிய மாணாக்கனான அர்ச்சுனனுக்கு உறுதியாகச் சொல்லி யிருந்தான். ஒருநாள் நாயொன்று துரோண உருவில் சிறுநீர் பெய்ய, ஏகலைவன் சினந்து அது தன் குருவுக்குச் செய்த

அபசாரத்திற்காகத் தற்செயலாய், முற்கூறிய ரகஸ்ய வித்தையால், ஓரம்பு அதன் மீது எய்தான். நாய் வீறிட்டுக் கதறிக்கொண்டு, சல்லடைக்கண் போல் பொத்த தன சரீரத்தினின்றும் ரத்தம் சொட்டச் சொட்ட அதற்கு உடையோனான அர்ச்சுனனிடம் சென்றது. நாயைக் கண்டதும் அர்ச்சுனனுக்குக் கோபத்தினும் ஆச்சரியமே மேலிட்டது. 'துரோணர் கூறிய உறுதி மொழி சுத்தப் புரட்டு' என்று தீர்மானித்து, அவரை வரவழைத்து, நாயைககாட்டி, "ஐய! 'நீர் மூவர்க்கே தெரியும்' என்ற ரகஸ்ய வித்தை வேற்றாள் ஒருவனுக்கும் தெரிய வந்திருக்கிறது என்பது இந்நாயின் கோர நிலையால் தெரியவந்திருக்கிறதல்லவா? இன்னும் யார்க்கோ நீர் ஆசாரியராயிருந்து கற்றுக கொடுத்துள்ள உண்மையை மறைத்தமைக்கு விசனப்படுகிறேன்" எனறான். துரோணர் திகைத்து, அவன் கூறியதை முற்றும் மறுததனர். பிறகு உண்மையறியுமாறு இருவரும் நாய் அழைத்துச சென்றவழி சென்றனர். ஏகலைவன் 'குருபக்தி'யாலேயே தன் போன்ற வீரனானமை யறிந்ததும், அர்ச்சுனன் வெட்கி, அவனிடத்து மிகுதியும் பொறாமை கொண்டான். அர்ச்சுனன் மனம் திருப்தியுறவே, துரோணர், ஏகலைவனுககு அவன் கற்ற வித்தை யேதும் பயனற்றுப் போம்படி, அவனுடைய வலது கைக் கட்டைவிரலைக் குருதக்ஷிணையாகப் பெற்றன ரென அறிக.

கிரீடி தன்னைக் கொன்ற தன்சுதன் வீரம் கண்டு மகிழ்ந்தது:—முற்கூறிய படி ஏகலைவனது வன்மை கண்டு பொறாமையுற்ற அர்ச்சுனன், மணலூர் மன்னனாகிய சித்திரவாகனனது மகள் சித்திராங்கதையை ஒரு காலத்தில் மணந்து, பப்பிருவாகனன் என்ற ஓர் மகனைப் பெற்றான். (இச் சித்திராங்கதையைத் தான் 'அல்லியரசாணி' யென்றும், பப்பிருவாகனனைப் 'புலந்திரன்' என்றும் பாமரர் கூறுவர்.) தர்மபுத்திரன் செய்த அசுவமேத யாகத்தில, இப் பப்பிருவாகனன், அசுவத்தைத் தடுக்கவே, அர்ச்சுனன் அவனுடன் அவன் இன்னானென அறியாமற் பொருதான். நிகழ்ந்த கடும்போரில் பபபிருவாகனன் வெற்றியாளனாகி அருச்சுனனை அவன் தன் தன் தந்தையென்று அறியாது கொன்றே விட்டான். பிறகு 'உலூபி' என்ற நாக கன்னிகை, தன் நாயகனான அர்ச்சுனனை உயிர்ப்பித்த பின்னரே, பப்பிருவாகனன், அர்ச்சுனனைத் தன் தந்தை யென அறிந்து, தக்க மரியாதை செய்து, அசுவமேதக குதிரையை அவனிடம் ஒப்புவித்தான். அப்பொழுது அர்ச்சுனனுககுத் தன் மகனது வீரத்தைப் பற்றிய மகிழ்ச்சிக்கு எல்லை இல்லாதிருந்தது" என்பதே. நிற்க.

"தந்தையினும் கற்றோரே தம்மக்களது அறிவைக் கண்டு மகிழ்பவர்" என்று பொருள்பட உரை கூறி, அதற்கு, " 'மன்னுயிர்' என்பது

ஈண்டு அறிவுடையார் மேல் நின்றது; அறிவுடைமை கண்டு இன்புறு தற்கு உரியவர் அவராதலின்" எனக் காரணம் உரைக்கின்றார் பரி மேலழகர்.

'வேதப் பொருள் உரைத்தான் வேள் அரனுர்க்(கு)' என்ன
மாதுமையாள் மிகவுவந்தாள் வள்ளுவரே!—ஓதுங்கால்[அமே
ஈன்ற பொழுதிற் பெரிது (உ)வக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய். (கூ)

(அ-ம் முதலியன)—வேள்-முருகக் கடவுள், அரனுர்க்கு-பரமசிவ னுக்கு, உமையாள்-பார்வதி தேவி, மிக்கு-மிகவும், உவந்தாள்-மகிழ்ந் தாள், ஈன்ற பொழுதில்-மகனைப் பெற்ற காலத்தில் உண்டாகும் மகிழ்ச் சியினும், உவக்கும் - மகிழ்வாள், சான்றோன் - கல்வி கேள்விகளில் நிறைந்தவன்.

வேள், அரனுர்க்கு வேதப்பொருள் உரைத்தது:—சுப்பிரமணியக்கட வுள், 'ஸ்கந்தகிரி'யில் இருக்கையில், ஒரு நாள் பிரமதேவன் தன்னைத் தக்கவாறு வணங்காது செல்லக் கண்டார். கண்டதும், பிரமனை அழைப் பித்து "ஐய! நும்தொழில் யாது?" என்று கேட்க, தான் 'சிருஷ்டி கர் த்தா' என்றும், வேதங்கட்குத் தலைவன் என்றும், அவன் இறுமாந்து உரைத்தான். அது கேட்டு அவர், 'உமக்கு வேதம் வருமாகில் தயை செய்து கூறுக' என, அவன், 'ஓம்!' எனத் தொடங்க, " 'ஓம்' என்றால் என்ன என வினவினர் குமரக் கடவுள். அதற்குப் பிரமன் 'அது பிர ணவ மந்திரம்' என்னலும், அப்பிரணவத்திற்குப் பொருள் கூறித் தயை செய்து மேற் செல்க" என்றனர். அதன் பொருள் அறியாது பிரமன் மயங்கி நிற்க, அவனைச் சிரததிற் குட்டிச் சிறையில் இட்டனர். பிறகு விஷ்ணு முதலிய தேவர்கள் சிவபிரானிடம் சென்று பிரமனை விடுதலை செய்யுமாறு வேண்ட, அவர் முருகக் கடவுளிடம் போய் பிரமனைச் சிறை யிட்டதற்குக் காரணம் கேட்டு அவரை நோக்கி, "மகனே! பிரணவத் திற்குப் பொருள் நீ கூறமுடியுமா?" என்ன, அவர் 'கூடும்' என உரைத்து ஈசுவரன் மகிழ அவர்கட்கே உபதேசம் செய்தனர்" என்பதே.

இன்உதவி செய்யா(து) இராமன், தனைப்பெற்ற
மன்இறப்பக் காடுறல்என்? வள்ளுவரே!—முன்னே
மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி 'இவன்தந்தை
என் நோற்றான் கொல்!'என்னும் சொல். (ம)

(அ-ம் முதலியனே):—இன்உதவி—இனிய உபகாரம், மன்—தசரத மன்னன், ஆற்றும்—செய்யும் நோற்றன்கொல்!—தவம் இயற்றினனோ!, சொலி—சொல்லும்படி நடந்து கொள்ளலாம்.

தசரத மன்னன் இறக்கும்படி ஸ்ரீராமன் காடேற்றது பிரஸித்தம். மரணமே தன் தந்தைக்கு ஸம்பவித்த போதிலும் "அவனது வாக்கைப்பரிபாலனம் செய்வதே" அவனுக்கு மகனாகிய தான் செய்யும் பேருதவி என்று ஸ்ரீ ராமன் உணர்ந்தே சென்றான் என அறிக.

(இன்னும் வரும்.)

ம. கோ.

சாணக்கிய சாஹஸம் என்னும் சந்திரகுப்த சரித்திரம்.

(297-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சாணக்யன தனது விடுதிக்குப் புறப்பட்டவுடன், பருவதேசன் சேகரனுக்குச் சர்வ சேனாதிபத்தியம் அளித்து, அவனை நோக்கி, "இனி நீ சாணக்யனிடம் சென்று அவர்கட்டளையின்படி நடந்து கொள்" என்று சொல்லி அனுப்ப, அவனும் சாணக்யனிடம் வந்தான்.

வந்ததும் இருவரும் சிறிது நாழிகை யுத்த விஷயமாக ஏதேதோ ஆலோசனை செய்தார்கள். அப்பொழுது சாணக்யனுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் உதித்தது: அவன் சேகரனை நோக்கி, "நீ இக்ஷணமே மலயகேதுவைப் போலவே ஜாதி அசசும் பாவனையுமுள்ள அதிபுத்திசாலியான ஒருவனைத் தெரிந்தெடுத்து, அவனை அரசர்க்குரிய ஆடை அணிகளால் அலங்கரித்து யானை மீதேற்றி, நமது பரிவாரங்களுடன், 'காசிராஜன் சேனைபோல் வேஷந்தரித்து நேற்றுக் காசிமார்க்கத்தில் இறங்கியிருக்கும் நமது சேனைபால்' அனுப்பிவருக" என்று ஆக்ஞாபித்தான்.

சேகரன் சாணக்யன் கூறியவாறே யாவும் செய்து முடித்து அங்ஙனம் செய்து முடித்த விஷயத்தைச சாணக்யனுக்கு அறிவித்தான்.

சாணக்யன் சந்தோஷித்து தன்னிடமிருக்கும் வீரர்களில் சாமாத்தியம் மிக்க அறுவரை வரவழைத்தான். அவர்களில் இருவரை "இன்று நக்தர்சன் ஜபசாலைவருவது திண்ணம். நீங்கள் காசிராஜனது தூதர்கள் போல் வேஷந்தரித்து, அவர்களிடம் ஜபசாலைக்குச சென்று இவ்விதம் சொல்லுங்கள்" என்று இரகசியமாக ஏதோ சொல்லி அனுப்பினான்.

பிறகு வேறிருவரை அழைத்து, "காசிராஜ சேனைபோல் வேடம் புனைந்து நமது ஸைந்நியம் ஜபசாலைக்கு புறப்பட்டவுடன், நந்தர்களிடம் வந்து இவ்விதம் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டு அவர்களை செலவிடுத்தான். கடைசியாய் எஞ்சிய இருவரை அழைத்து, "நீங்கள் காசி மார்க்கத்திலிருக்கும் சேனையில் இருந்து கொண்டு, நந்தர்கள் ஜபசாலைவந்த விஷயத்தையும் சேகரனது சங்கேதத்தையும் அறிந்து, அதன்பிறகு இவ்விதம் செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்து, அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினன்.

குதிரை வீரர் அறுவரையும் அனுப்பியபிறகு, சாணக்யன் சேகரனைத் தனிமையான ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, அவனை நோக்கி, "ஐய! சேகர! நந்தர்கள் ஜபசாலை வந்ததும் அதைக் காசி மார்க்கத்தி லிருக்கும் நமது சேனைகள் அறியும்படி கொடிசசீலையும் கையுமாய்க் குதிரை வீரர்களை ஆங்காங்கு வழியில் நிற்கும்படி செய். நந்தர்களுடன் யுத்தம் ஆரம்பிக்கும் போதே ஜயபேரிகையை முழக்குமாறு கட்டளையிடு. ஜபசாலை நெருப்புப் பற்றி எரிய ஆரம்பித்தவுடன் நமது மீதிச சேனைகள் நந்தர் சேனைகளைத் துரத்திக் கொண்டு செல்லுமாறும் திரும்பி அவற்றிற்கு எச்சேனையும் சகாயமாக வராது தடுத்து யுத்தம் செய்யுமாறும் சொல். ஸேனாதிபதிகள் யாவரும் சித்தமாகக் காத்திருக்கட்டும். ஆங்காங்கு ஒற்றர்களை நிறுத்தி, அப்போதைக் கப்போது நடக்கும் சமாசாரங்களை நமக்கு அறிவிக்கும்படி உத்தரவு செய். இன்று வெகு ஸாமர்த்தியமாகவும் ஜாக்கிரதையுடனும் இக்காரியங்களை முடிக்க வேண்டியவன் நீ தான்" என்று உபசாரமாகச் சொல்லி அனுப்பினன். சேகரனும் சாணக்கியனது கட்டளைப் பிரகாரமே சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துத் தயாராக இருந்து கொண்டிருந்தான்.

இஃது இங்ஙனமிருக்க, பர்வதேசனிடம் சென்றிருந்த நியோகியான விஷ்ணுதாஸனது சுப மொழிகளை நந்தர்கள் கேட்டு மகிழ்ந்து ராக்ஷஸனுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு, சமீபத்தில் யுத்தம் கிடையாதென்று நிர்விசாரமாய நித்திரை செய்தனர். ராக்ஷஸனும சத்துரு பயம் இல்லையென்று தான் மனப்பூர்வமாய் எண்ணி இருந்ததாலும் நந்தர்களுக்குத் தெய்வ பலம் தப்பி நாசகாலம் குறுகியதாலும இரண்டு நாள் யுத்தத்தில் அடைந்த களைப்பாலும் மெய்மறந்து உறங்கினன்.

நந்தர்கள் விழித்தெழுந்ததும், மாஸோபவாசியின் சிஷ்யர் இருவர் காலமிருத்யுவின் தூதர் போல் நந்தர்களை அழைக்க வந்தனர். வந்தவர்கள் நந்தர்களை நோக்கித் தாங்கள் மாஸோபவாசியின் சிஷ்யர்கள் என்று அறிவித்து "இன்று வெள்ளிக்கிழமையாதலால் ஜபஹோமங்கள் முடிவடைகின்

றன. பூரண ஆகுதி ஸமயத்தில் உண்டாகும் தேவதையின் தரிசனத்துக்கு "நாங்களும் வருகிறோம்" என்று நீங்கள் சொல்லி இருந்தீர்களாம். அதற்கு இதுவே சமயம். தேவதாதரிசனத்துக்கு முன்னதாகவே உண்டாகும் சுபசகுனங்கள் எல்லாம் குறைவறக் காணப்படுகின்றன. எங்கள் குரு இப்பொழுது தியானத்தில் இருக்கிறார். சீக்கிரம் விஜயம் செய்தால் நன்று" என வேண்டி நின்றனர்.

நந்தர்கள் காலவசத்தால் மதிமயங்கி யுத்தத்தால் இளைத்துக் களைத்த ராக்ஷஸனை எழுப்ப மனமின்றி யாகசாலை செல்லக் குதிரை ஏறினர். ஏறும் சமயத்தில் மெய்காவலர் வழக்கப்படி நந்தர்களண்டை வந்து நிற்பதை மாஸோபவாஸியின் சீடர்கள் கண்டு வெறுப்பிற் கறிகுறியாகத் தம் கைக் கமண்டல நீரை ஒருவர்மேலொருவர் வாரி யிறைத்துக் கொண்டு பின் சென்றனர்.

நந்தர்கள் இதைக் கண்டதும், "சூத்திரர்கள் ஜபசாலைக்குச சமீபத்திலும் வரக்கூடாது" என்று மாஸோபவாஸி அவர்களுக்குக் கூறியிருந்த விஷயம் அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. வரவும், அவர்கள் "எவரும் ஜபசாலைககு அருகில் வரவேண்டாம்" எனக் கட்டளையிட்டு வலிய வந்த பாக்கிய லக்ஷ்மியை உதைத்துத் தள்ளும் நிர்பாக்கியன் போல் தக்க துணைவலியின்றி இரண்டொரு ராஜகுமாரர்களை மட்டும் அழைத்துக் கொண்டு "சத்துரு நாச ஜபசாலை" அடைந்து அதனுள் பிரவேசித்தனர்.

அச் சமயம் மேற்குத் திசையில் காசி மார்க்கத்தில், ஆகாயம் பூமி ஆகிய இரண்டும் பிளந்து விடும் போல் பீரங்கி சப்தம் கேட்டது. கேட்கவே, "ஓஹோ! நாம்சொல்லியிருந்த பிரகாரம் காசி ராஜன், காரியத்தை முடித்துப் பாவதேச சேனைகளுடன் யுத்தம் செய்கிறான்" என்று பற்பல விதமாகப் பேசிக்கொண்டே, தியானத்திலிருந்த மஸோபவாஸி மகா முனிவரை நமஸ்கரித்து, ஹோம குண்டத்தை வலஞ்செய்து, வந்தனர். அப்போது காசிராஜனது தூதர்போல காணப்பட்ட இருவர் நிராயுத பாணிகளாகக் குதிரை மீதேறி, ஓட்டம் ஓட்டமாய் ஓடி வந்து: "ஜயம்! ஜயம்!! ஜயம்!!!" என்று உரக்கக கூவினர். இஜ் ஜய சத்ததைக் கேட்டதும் நந்தர்கள் ஜபசாலை விட்டு வெளியில் வந்து, அத்தூதர்களை நோக்கி "என்ன விசேஷம்?" என்று கேட்டாகள.

அக் கபட தூதாகள் "ஸ்வாமிகாள்! நாங்கள் காசி ராஜனது தூதர்கள். எங்கள் அரசர் பர்வதேசனுக்கு ஸஹாயமாக வந்து வழியில் இறங்கிக் கொண் டிருந்ததும், பர்வதேசனது குமாரனை மலயகேது எங்கள் அரசரை எதிர்கொண்டு அழைக்க வந்தான். இருவர்களும் மரியாதை

யுடன் தத்தம் யோக க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டு ஒரே அம்பாரியில் உட்கார்ந்து வரும் போது, யானை பாடலீபுரம் நோக்கி வந்தது. அது கண்டு மலயகேது மலைப்புற்று, "இஃதென்ன? இவ்வழிச் செல்கிறதே!" என்று கேட்டான். அதற்கு எங்கள் அரசர், "இவ்வழிச் சென்றால் உங்கள் சேனை இறங்கி இருக்கும் இடத்திற்குச் சீக்கிரம் போய்ச் சேரலாம்" என்று சொல்லித் தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்க முடியாமற் புன்னகை புரிந்தார். இது கண்டு, "ஏதோ மோசடியாக அன்றோ இருக்கிறது!" என்று மலயகேது அம்பாரியினின்றும் கீழே குதித்தான். அவன் சேனைகள் அற்பமே யாதலின், எங்கள் அரசர் உடனே சிரமமின்றி மலயகேதுவைப் பிடித்து விட்டார். மலயகேது பிடிபடவே, அவனது பரிவாரம் ஓடி விட்டது. "பர்வதேசன் கூடிய சீக்கிரத்தில் இச் சமாசாரம் அறிந்து தன் சேனைகளுடன் வந்து விடுவன். ஆகையால் ஓர் தக்க துணைப்படை ஒன்று எமக்கு உடனே அனுப்புமாறு சொல்லி விட்டு வாருங்கள்" என்று எங்களை எங்கள் அரசர் அனுப்பி யிருக்கிறார். இங்கிருந்து இந்த நிமிஷமே சைன்யங்கள் சென்றாலன்றி முழு ஜயமும் நமக்கு இல்லாமற் போய் விடும்" என்றார்கள்.

இவை யாவும் கேட்டு நீந்தர்கள், "காசி ராஜன் நமக்குப் பரம மித்திரன். ஆதலால் தான் மலயகேதுவைப் பிடித்து நாம் செய்யச் சொன்ன காரியத்தைச் சாதித்து விட்டான். மலயகேது பிடிபட்டது சந்திரகுப்தன் பிடிபட்டது போலவே ஆயிற்று. சத்துரு நாச ஜபம் செய்யும் இம் மா ஸ்ரீபவாஸி, மகான் என்பதில் ஐயமே இல்லை. நம் காரியம் நன்கு நிறைவேறியதற்குக் காரணம் இவர் சிரத்தையுடன் செய்த ஜபமே ஆகும்.' என்று அகமகிழ்ந்து, பத்ரபடன் முதலியோரை அழைத்து, "நீங்கள் உங்கள் முழு சைனியத்துடனும் சென்று, பர்வதேசன், காசி ராஜன் மீது வந்து கவியாமல், நீங்கள் குறுக்கிட்டு நின்று யுத்தம் செய்யுங்கள்" எனக் கட்டளையிட்டனர். அச் சேனைத்தலைவர்களும் அரசர்களின் ஆக்ஞைப்படி சகல சேனைகளுடனும் புறப்பட்டுப் பாடலீபுரத்திற்குத் தென் திசையை நோக்கிச் சென்றனர்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

தபாற்கடிதம்.

தபாற்கடி தம்மே! தபாற்கடி தம்மே!
அம்புவியோர் புகழ் கம்பர்தம் நாளையில்
நீயிருந் திருப்பையேல், நிச்சயமாய் அவர்

உன்னைப்பற்றி ஒருபெரும் நூல்தனை
இயற்றியே இருப்பர். இங்ஙனம் இன்றிப்
பெற்ற அன்னையின் பெருவயி(று) எரியப்
பரமன் பூஜை பண்ணுநர் போன்று,
தாய் மொழி ஆகுநற் றமிழ்மொழி தன்னைப்
புறத்தே தள்ளிப் புல்லிய அன்னிய
பாஷைகற்றிட ஆசைமீக் கொண்டு
பெற்றோர் தேடிய பெரும்பொருள் யாவையும்
விரயம் செய்தும், ஒருபா ஷையிலும்
புலமை பெறாத புன்மையர் பல்லோர்
மலிந்த இக் காலையில், வாசனை யேநீ!
எவருளர் நின்புகழ் இசைத்திட? ஆயினும்,
நின்பால எனக்குள அன்பால சிற்சில
செப்புவன் சிறியேன். செவிமடுத் திடுதி.
பலமயில் களுக்(கு)அப் பாவலோன் தன்னுடை
எண்ணங் களைப் பிறர்க்(கு) இசைத்திட எண்ணின்,
மேலவன் செய்வதென்? காலணாக் கொடுத்து,
நின்னைப் பெறுவன். எந்திர மையி
லாயினும், எஃகால் ஆகியதாம ஒரு
கூரிய கருவியைக் கொண்டுதோய்த் தோ, ஒரு
எழுது கோலினை யெடுத்தோ, உன்றன்
மெல்லிய மேனி மிசையெலாம இழுப்பன்.
அந்தோ! பிழையுறின் அகங் கூசாமல்
அவ் ஆயுதத்தால் அடிப்பனே உன்னை!
வாய் விட் டரற்றிலை. வருந்தவு மிலையே!
என்னேநின் பொறை! என்னேநின் பொறை!
பொறையினிற் சிறந்தவாப் புவியையும் மலையையும்
கூறினர் சிற்சில கூர்மதி யுள்ளோர்.
அன்னோர் உன்றன் அருமபெரும் குணத்தை
அறியும் வண்ணம் அவர் காலத்தினில்
இருந்திலையே நீ! இருந்திருப பாயேல்,
பொறுமைக(கு) உன்னையே புகன்றிருப் பார்கள்.

ஆ! ஆ! அவ்வா(று) அடித்ததன் பின்னினை
விலைக்கு வாங்கிய விடுதியிற் புக்குப்
§போழ்வாய் உள்ளஓர் பேழையுட் போடுவர்.
ஆறுவென் பொன்னுக்(கு) அல்லும் பகலும்
உழைத்திடு கின்ற ஒருவன் எடுத்தனைத்
திரிகை மூலையெனத் திரண்டிருண் டுளவோர்
முத்திரைக் கோலால் முகத்தினில் அடிப்பன்.
ஐயோ! பின்னர் அருமைசால் நின்னை
மெய்யெலாம் நோவப் பையினுள் திணித்து
கயிற்றால் கட்டுவர். காட்டிலும் மேட்டிலும்
கொண்டு சென்றோர் வண்டியிலாயினும்
இருப்புப் பாதை யின்மிசை இயங்கும்
வண்டித் தொடரிற் கொண்டு சேர்த்துள்ள
செந்நிறம் பூசிய சித்திர வண்டியி
லாயினும் எறிவர். அப்புறம் அதனில்
உள்ளோன் நின்னை ஒருமுறைக் கிருமுறை
பார்த்துப் படித்துச் சேர்ப்பனோர் அறையில்.
மிகச்சிறு காலமே சுகத்துடனிருப்பாய்.
ஏனெனில் குறித்த இடம்வந் ததும்உனை
சுருக்குப் பையினுள் 'விருட்'டென எறிந்(து)உன்
சழுத்திற் கயிறுகொண்(டு) இழுத்துக் கட்டி
வெளியிற் பொத்தென வீசியே எறிவர்.
அவணிருந்(து) ஒருவன்உன் அகமெலாம் நோகச்
சரசரஎன் றுனைத் தரைமீதிழுத்து
வாயிலில் நிறுத்திய வண்டியில் எறிந்தோ
அன்றேல், தனது அங்கையிற் கொண்டோ
ஒரு விடுதிக்குள் உய்த்திடு வான். பின்,
அந்தோ! பாவம்! அங்கும் உன்னை
முத்திரைக் கோலால் முன்பு போலவே
அடித்திடுவார். பின் அங்குள ஒருவன்
நீ சேர் இடந்தனில் நினைச்சேர்த் திடுவன். உன்

§ போழ்வாய்-பிளந்தவாய்.

துன்பம் இத்தொடும் தொலைந்தபா டிலேயே!
நற்செய் தியைநீ நவின்றால் மட்டும
இன்னைப பெறுவோன் உவந்தனைப் பலர்க்கும்
காட்டுவன். அசுபம் காட்டிநின் றுயேல், .
கிழித்துச் சிதைத்துனைக் கீழெறிந் திடுவன்.
எய்தும் துயர்உனக் கித்துடன் தீர்ந்தது.
விலாச தார்கள் வேற்றிடம் செல்லினும
அவர்களைக் காணு யாயினும், பின்னுல
வாலறு குருவிபோல் வாடும் பெற்றிடும்
தபாற்கடி தம்மே! தபாற்கடி தம்மே!
பிறந்தது முதற்கொண் டிறந்திடும் வரைக்கும்
தனையம் அறப்பிறர் நன்னயங் கருதியே
துன்பமே நுகரத் தோன்றினை. ஆயினும்
*'தீமை நினைப்போர் தீமை பெற்றிடுவர்'
§'கடவுளும் எனது கடமையும்' என்னும்
உயர் நன்னீதிகள் உலகினுக்கெல்லாம்
உணர்த்துவோய்! யாம் பெறு ஒருபேறு உற்றனை.
'திருவுடை மன்னர் திருமால்' என்பர்.
அவர் முகங் காண்டல அரிதெமக் காகும்.
ஆயின் நீயோ, அநுதின மும்அவர்
திவ்விய முகம்நனி திகழப் பெற்றனை.
குணமும், புகழ்மிகு மணமும் பொருந்திய
தபாற்கடி தம்மே! தழைத்து நீ வாழி!
பொங்கும் மங்களம் தங்குக எங்குமே!

பி. ஆர். விசுவநாதன். சாத்தூர்.

விடுகதை வினா.

Xஅக்கரம் மூன்றில் அமைந்ததோர் சொல்லாம்:
அதிற்கடை யெழுத்(து) அகன்(று) ஒழிந்தால்
தக்கவர் மனத்தைத் துரும்பெனச் சுழற்றும்
தகுதியில் பொருட்(கு) உறுபெயராம்
§நக்கனர் கரத்தில் வைத்திடும் ஒன்றும்
நடுவெழுத(து) இல் எனில். இன்னும்
மக்களிற் பெரும்பேர் ஆம்,முதல் எழுத்து
மறைந்திடில். அம்மொழி யாதோ?—மலேயாடி.

* Honi Soit Qui Maly Pense § Dieu Et Mou Droit

Xஅக்கரம்–எழுத்து: §நக்கனர்–பரமசிவன்.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து

(308-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதை—13.

ஆபத்துக்களினின்று சமயோசிதமாய்த் தப்புவோனே தீரன்.

தக்ஷிண தேசத்தில் தென்னாலிராமன் என்ற தைரியசாலி ஒருவன் இருந்தான். ஒருசமயம் சில திருடர்கள் அவன் வீட்டில் ஒளித்திருந்தனர். அதையறிந்த ராமன் எல்லாப் பொருளையும் பூமியிலுள்ள அறையில் பத்திரப் படுத்தி விட்டு மனையாளை அழைத்து, "பிரியே! சிலதினங்களாகக் கள்ளர் பயம் அதிகமாயிருப்பதாக அறிந்தேன். ஆகையால் நமது வசம் இருக்கும் பொருள்களைப் பெட்டியில் வைத்துத் தோட்டத்துக் கிணற்றில் போட்டு விடுவோம்" என்றான். அவளும் 'சரி' என்றாள். பிறகு புத்திமானான ராமன் பெட்டியைக் கல் முதலியவற்றால் நிரப்பித் தொப்பெனக் கிணற்றில் போட்டான். அப் பேரொலி கேட்டு, மூடத்திருடர்கள் கிணற்றருகில் சென்று, பொருளாசையால் தங்களில் ஒருவனைக் கிணற்றில் இறக்கினார்கள். அவன் அப் பெட்டியைத் தூக்க முடியவில்லை. பிறகு எல்லோரும் ஒன்று கூடி அங்கிருந்த ஏற்றத்தினால் ஜலத்தை இறைக்க ஆரம்பித்தனர். ராமனும் அவர்களுக்குத் தெரியாமலே அந்த ஜலத்தைத் தோட்ட மரங்களுக்கும் பாத்திகளுக்கும் பாய்ச்சினான். கிணற்று ஜலமுழுதும் அநேகமாய் இறைக்கப்பட்டது. கடைசியில் அம் மூடர்கள் பெட்டியை வெளிக்கொணர்ந்ததும், ராமன் "உங்கள் உதவிக்கு வந்தனம். தோட்டத்துக்கு வேண்டிய நீர் பாய்ந்தது மன்றி எறிந்த பெட்டியும் வெளிவந்தது. இவ்வளவு சிரமம்போதுமே" என்றான். அதைக் கேட்ட திருடர்கள் வெட்கி ஓடினர்.

வி. சு நடராஜன்.

முக்கிய விவேகோதய அறிவிப்பு.

வருகிற தை௴ நம் பத்திரிகைக்கு முதலாவது ஆண்டு, குறைவற முறைபெற நிறை வெய்தி, மாசி௴ முதல் இரண்டாவது ஆண்டு ஆரம்பிக்கின்றது. நமது பத்திரிகையின் சந்தா முன்பு 1—8—0 ரூ யாக இருந்தது சென்ற ஸெப்டம்பர்௴ முதல் 2 ரூபாய் ஆக்கப் பட்டிருப்பதையும், மாணவர்களுக்கும் பெண்பாலார்க்கும் அது 1—8—0 ரூபாய் வருட சந்தா விற்குக் கொடுபடும் என்பதையும் நமது நேயர்கள் நன்கறிவார்கள். இது காகிதக் கிராக்கியால் நேர்ந்த கஷ்டமே என்பதை அறிவாளிகள் அறியாதிரார். மாசி முதல் சந்தாதார்களின் பெயர் முதலியன அச்சிட வேண்டியிருத்தலின் தை மாதத்திற்குள் நமது அபிமானிகள், புதிதாக ஏற்பட்டுள்ள வருஷசந்தாத் தொகையைக் காலதாமத மின்றி அனுப்பி எமக்கு உதவி புரியுமாறு வேண்டுகிறோம். சந்தாதார் தொகை அதிகரிப்பின் முன் போலவே சந்தாத் தொகையைக் குறைத்து நடத்தி வருவோம் என்பது உறுதி.

—பத்திராதிபர்.

மாட்சிமை தங்கிய இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் ஹிரண்ய
கர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத மஹாராஜா
அவர்களாகிய ஆனரபிள

B. முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு

வாசிக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரம்.

சோதிருவாழும் செம்பியன் னாட்டின்
முந்தை வளர்திகழ் முகவைக் கிறைவ!

இந்நகரதனில் எந்தவித மாந்தரும் வந்து குடியேறி வைகு முன்னமே, என் முன்னோர்க்கும் மகாராஜா அவர்களின் முன்னோர்கட்கும் ஏற்பட்டுள்ள தொன்றுதொட்ட உரிமையால் என் முன்னோர்களை இங்குக் கோயிலும் குளமும் முதன்மையா யமைத்துக் கொண்டு சந்ததி பரம்பரையாய் வாழ்ந்துவரும்படி செய்த கருணையை எஞ்ஞான்றும் மறவாமல் இஞ்ஞான்றும் மஹாராஜா அவர்கள் முன்னிலையில் பாராட்டுகின்றேன்.

சீரிய கல்வியும் நேரிய செல்வமும்
ஓரியல் பாய்வளர் சூரிய குலாதிப!

தங்கள் பிதாமஹாராஜா அவர்கள், என்பாற் கொண்ட அன்பின் மேலீட்டால், "தன்னை யுளத்திடை யுன்னினர் யாவரும், கருச்சுழியிற் புகாத திருச்சுழித் திருப்பணி செய்க" என்று கட்டளையிட்டுத் திரவிய சகாயமுஞ் செய்து என்னைத் "திருச்சுழி அண்ணாமலைச் செட்டியார்" என அழைத்த சிறப்புப் பெயர் செகமெலாம் பரவிய திருவாக்கின் விசேடத்தை என்னென்றுரைப்பேன்!.

தாதுபதிமுல்லைத் தார்திகழ் புயாசலச்
சேதுபதி நாமந் திகழ்மகா ராஜ!

பெருந் தகைமையுடைய தாங்கள் என் வேண்டுகோளுக் கிணங்கி என் கிருகத்துக்கு விஜயஞ் செய்தமைக்கு "அருமையி லெளிய அழகே" என்னும் திருவாசகம் இலக்காவதன்றி மற்றி யாது இலக்காகத் தக்கது.?

சேவிற் றிகழ்பவர் திருவரு ளொடுவளர்
காவித் துவசக் கன்னிய மகீப!

இத்துணை உரிமைவாய்ந்த தங்களுக்குச் சென்னைச் சட்ட நிரூபணசபையில் தென்ஜில்லா ராஜாக்கள், ஜமீந்தார்களின் பிரதிநிதிஸ்தானம் கிடைத்தமையைப் பற்றி எனக்குண்டான சந்தோஷத்தைத் தங்கள்பாற் றெரிவித்துக் கொள்கின்றேன்.

எத்திசை மன்னரும் எத்து மெழிற் புகழ்
முத்துராம லிங்க மூதகு வள்ளால்!

தங்களுக்கு இன்னும் உயர்ந்தபதவிகள் கிடைத்தற் பொருட்டும், தங்கள் செங்கோல் செழித்தோங்கி நின்று நிலவுதற் பொருட்டும், தாங்கள் தீர்க்காயுளையும் அஷ்டைசுவரியங்களையும் பெற்று பல்லாண்டு வாழுதற் பொருட்டும் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

சேதுபதி மரபு நீடூழி வாழ்க.

தேவகோட்டை. திருச்சுழியல்,

நள ௵ புரட்டாசி மீ ௮௳ } தி. அ. சு. அண்ணாமலைசெட்டியார்.

விநோதக் கூற்று.

(1) பெரும்புயல் அடிக்கும் ஓர் நாள், கொள்ளிடத்தைக் கடந்து ஒரு பரசல் சென்று கொண்டிருந்தது. முன்னிலும் பெருங்காற்றடிக்கவே இதில் கொண்டு ஒரு

பிரயாணி:— ஏ! பரசக்காரா! இந்தாத்துலே ஆள்கள் முழுகிச் செழுகிப் போறதுண்டோ?

பரசல்காரன்:—நல்ல கேள்வி கேக்கறீங்க. முழுகியே ஒருத்தரும் போக மாட்டாங்க. விழுந்தவங்க இன்னிக்கி முழுகினா நாளைக்குள்ளே மேலே மெதந்துவோங்க.

---

(2) முரட்டுத் தனமாக இந்துமதத்தை வாய்க்கு வந்த வாறு தூஷித்துத் தன் மதத்தைப் புகழ்ந்து கூறியதும், தாடி முதலியன வளர்த்துக் கொண்டு யோகீசுவரர் போல் நின்ற (சிவகங்கை ஹைஸ்கூல தமிழ்ஆசிரியராக இருந்து போதகுரு மடத்தலைவராகிய) காலஞ்சென்ற ஸ்ரீ: தெய்வசிகாமணி ஐயரை நோக்கி ஓர்

உபதேசி:—"ஸகோதரரே! யார் மதம் பெரிது? இப்பொழுது யோசித்துக் கூறும்" என்றான.

புலவர்:—(சிரிப்பை அடக்கிக் கொண்டு) "சந்தேகம் என்ன? கேட்கவும் வேண்டுமோ? உமது மதமே"

உபதேசி.—(புலவர் மனம் திரும்பியதாக மகிழ்ந்து) "யாவரும் நல்வழிப்படுமாறு காரணம் காட்டி இங்குள்ளோர்க்கு தயவு செய்து சொல்லுங்கள்".

புலவர்:—முதலில் எங்களுக் கேதையா மதம்? நாங்கள் நெல்லரிசி சோறு சாப்பிடுகிறவர்கள் தானே? உமது மதமே பெரிதென்று உமது வாய் வார்த்தைகளே காட்டுமே" என்று யாவரும வயிறு வெடிக்கச சிரிக்கும்படி சொலலிச சென்றார்.

—ஆயக்கன்னனார்.

விடுகதை வினாவுக்கு விடை.

சங்கைபற கங்கா ஜடேசற்(கு) அவன்குறித்த
நங்கையவள ஆவளொரு நாற்குணமும்—பொங்கி ஒளிர்
மங்கை'தம யந்தி'யென மாநிலமெல் லாம்புகழே
தங்குவிலே கோதயமே! சாற்று. —ஆர். மகாதேவன்.

புத்தகமதிப்புரை.

சுபோத ராம சரிதம்:— சென்னையிலிருக்கும் பண்டிதை ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களாற் செய்யப்பட்ட "சுபோதராம சரிதம் என்னும் ஓரழகிய சிறு வடமொழிக் காவிய புத்தகம ஆக்கியோரால அனுப்பப் பெற்றுப் படித்துப்பார்த்தேன். ஸ்ரீமதி பாலம்மாளவர்கள் முன்னர் மைசூரிலிருந்த டாக்டர் எ. ஆர். வைத்தியநாதசாஸ்திரியார் M. A M. B. & C. M. அவர்களின் அருமைப் புத்திரியாராவர். இவர்களியற்றிய இச "சுபோதராமசரிதம்" என்பது, வடமொழியிற் சிறந்த மகா கவியாகிய வான்மீகி மகரிஷி மதுரம் பழுத்தொழுகச் செய்தருளிய இராமாயண கதையின் சுருக்க மாகும். 'அநுஷ்டுப' என்னும் வடமொழிச் சுலோகங்கள் ஏறக்குறைய இருநூற்றைம்பதான் இது ஆக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு காண்டத்தின் ஆரம்பத்திலும் 'ஆர்யை' என்னும் விருத்தங்களால் கதை கருதிய துதி பாடப் பட்டுள்ளது. ஸ்ரீராம கதை விடாமற் செவ்வனே கூறப்பெற்றிருப்பதோடு, சுலோகங்களெல்லாம் அழகிய இனிய சொற் கூட்டங்களாற் செய்யப்பட்டுள்ளன. படிக்குங்கால் நாவிற்கு இனிமை பயப்பதோடு மனத்துக்கும் உற்சாக மூண்டாக்குகின்றது. வடமொழிப் பாஷாஞானம் பெற விரும்புவோர்க்கு, இது, முதலிற் சுலோகப்பயிற்சிக்கு உரிய தாகு மென்ப தென் கருத்து. சுலோகங்களின் நடை, சிறுவர்களுக்கு எளிதிற் போதிக்கத் தக்க முறையில் அமைந்துள்ளது. அதனாசிரியராகிய ஸ்ரீமதி பாலம்மாளவர்களின் கவித்துவ சக்தியும் பாஷாஞானமும் யாவராலும் பாராட்டற்பாலன. நம் இந்திய நாட்டுப் பெண்மக்கள் கல்வித் துறையிற் சிறக்கவேண்டு மென்று விரும்பும் நம்மனோர்க்கு இவ் வம்மாளவர்களின் அறிவும், செயலும் பெரிதும் மகிழ்ச்சி தருவனவாம். சுருக்கமான கல்வியாவது நம் பெண்மக்கள் அடைய மாட்டார்களா என்று கருதி முயலும் அன்பர்களுக்கு ஒருகாவிய கர்த்தாவாக, இவ்வம்மாளவர்கள் விளங்குவது எவ்வளவு உவகை தரும் என்பது யான் கூற வேண்டா. ஸ்ரீமதி அம்மாளவர்களுக்கு வடமொழிப் பயிற்சியே யன்றி ஆங்கிலம், கன்னடம் தமிழ் முதலிய பாஷைகளிலும் பயிற்சியுண்டென்று தெரிகிறது. படிக்குந்தோறும் வியப்பை விளைவிக்கும் "சாணக்யசாஹஸம்" என்னும் கதையைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்களுமிவர்களே. மதுரையிலிருந்து மாதந்தோறும் வெளியாகும் விவேகோதயத்துக்கு ஸ்ரீ: ம. கோபால கிருஷ்ண ஐயரவர்களுடன இவர்களும பத்திராதிபராக இருப்பது நம் தமிழ் நாட்டுப் பெண்மக்கள் கல்வி விருத்திக்கு முக்கிய ஏதுவாகும்.

இந்நூலாசிரியராகிய பண்டிதை ஸ்ரீமதி பாலம்மாளவர்களுக்கு இதுபோல இன்னும் பல காவியங்களைச் செய்யவும், தமிழில் வாராத பல நூல்களை மொழிபெயர்க்கவும, ஊக்கமுஞ் சக்தியு மேன்மேலும் அருளும் வண்ணம் வாக்கு தேவியைப் பிரார்த்திக்கின்றேன்.

மகிபாலன்பட்டி
19—11—16 } மு. கதிரேசச் செட்டி.

☞ இது நமது அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது. எமக்குப் போதிய வடமொழிப் பயிற்சியின்மையால் இதனை இரு மொழியிலும வல்லஸ்ரீ: மு. கதிரேசச் செட்டியார்க்கு அனுப்பி, அவர் அனுப்பிய அபிப்பிராயம் வெளியிட்டோம. ஜமீந்தார் வள்ளலாகிய ஸ்ரீமாக் பெத்தாச்சி செட்டியார் M R.A.S-க்கு சமர்ப்பித்தது இது. ப-ர்.

சமாசாரக் கொத்து.

வருஷோத்ஸவம்:—விருதுபட்டிப் பாடசாலை உபாத்தியாயர்களின் உபாத்திமைச சங்கவருஷோத்ஸவம் 7—11—16ல் சிறப்பாக நடை பெற்றது. அப்போது இராமநாதபுரம் ஜில்லா பள்ளிக்கூடங்களின் உதவி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ: டி ஏ. ஸ்வாமிநாதையர் அக்ராஸனம் வகித்தனர். அறுப்புக்கோட்டை ரேஞ்சு ஸப்அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ: வே. முத்துசாமி ஐயர், எம். ஏ. எல். டி, விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியாசாலைத் தலைவர் ஸ்ரீ: மாணிக்கவாசக நாடார் பி. ஏ. முதலிய பலகனவான்கள் விஜயம் செய்திருந்தனர். இவ்வாண்டில் சங்கத்தின் 'ஆஜர்' ஒழுங்கும் பிரசங்க ஏற்பாட்டின் ஒழுங்கும் அபிவிருத்தி யடைந்திருப்பதும் சங்க அறிக்கையினின்றும் சங்கத்திற்குச் சந்தாத்தொகையை முற்றிலும் நிறுத்தி விட்டு, மெம்பர்கள் பிரவேசக் கட்டணமாக சொற்ப தொகை கட்டும்படி ஏற்பாடாயிருப்பதும் தெரிய வருகின்றன. அன்று மாலைக் கூட்டத்தில் மாணாக்கர்கள் பக்க வாத்திய ஸஹிதமாய் 'நீதிப்பாட்டு' 'கதைகடித்தல்' இவைகளும், ஓர் உபாத்தியாயரால் ஒரு 'மாதிரிப்பாடமும்' நடைபெற்றன. அன்று காலை, மாணாக்கர்களுக்குப் பந்தய ஆட்டங்களும், பொதுவாக கணக்கு, சித்திரம், கைத்தொழில் இவற்றில் போட்டிப் பரீக்ஷைகளும் நடைபெற்றன. இவற்றிலும், கதை கடித்தலிலும் மாணாக்கர்களுக்கு தக்கவாறு பரிசுகள் மாலைக்கூட்டத்தில் அக்கிராஸநாதிபதியால் அளிக்கப்பட்டன. அக்ராஸநாதிபதியும் ஸ்ரீ: மாணிக்கவாசக நாடாரும் நடந்த விஷயங்களைப் பற்றிச் சிலாகித்து பேசினர். இவ்வாறு இவ்வருஷோத்ஸவம் இனிது நிறைவேறியது. சங்கத்தின் நன்னிலைமைக்கு அதன் பிரசிடண்டாகிய ரேஞ்சு ஸப்அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டரும், வைஸ் பிரஸிடண்டாகிய சூப்பர் வைசரும், காரியதரிசியாகிய விருதுபட்டி முனிசிபல் மஹமடன் ஸ்கூல் ஹெட் மாஸ்டரும் காரணமாவர்—'கண்டு களித்தோன்'

புரொபஸர் ராமமூர்த்திக்கு ஒருபரிசு:—அறுப்புக்கோட்டையில் தமது அருமையான ஸர்க்கஸ் ஆட்டங்களால் அவ்வூர் வாசிகளை மகிழ்வித்த புரொபஸர் ராமமூர்த்திக்கு அவ்வூரை யடுத்த பாலையம்பட்டியிலுள்ள நாயக்கமார்கள் ஒருதங்க மோதிரத்தைத் தமது ஜாதியபிமானம் பற்றிப் பரிசாக அளித்தனர். அந்த ஸமயம் அறுப்புக் கோட்டை ரேஞ்சு பள்ளிக் கூடங்களின் சப் அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டர் வே. முத்துசாமி ஐயா எம். ஏ. எல். டி. அக்கிராஸநம் வகித்தனர். ஸ்ரீ ராமமூர்த்தியை, அவ்வூரார் மோட்டார்காரில் உட்காருவித்து வாத்ய கோஷத்துடன் அந்த மீட்டிங்கு'க்காக நிருமித்திருந்த அழகிய பந்தலில் வரவேற்றினர். அதன் பின்னர் தமிழில் புரொபஸர் ராம மூர்த்திக்கு வந்தனோபசாரம் படிக்கப் பெற்றதும் பொன்னாழி புரொபஸாரின் விரலிற் புனையப்பெற்றது. அதனை யடுத்து ஸ்ரீ ராமமூர்த்தி தேகாப்பியாச விஷயமாக ஹிந்து மத சாஸ்திரங்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டி மிகுந்த உத்ஸாகத்துடன் பிரசங்கித்தனர். பிறகு அக்ராஸநர் அவர்கள் தேகாப்பியாசம் கலவியில் முக்கியமான பாகம் என்றும, அது நமக்கு நாட்டிற்குத் தக்கபடியாகவும ஆசாரங்களுக்கு அனுசரணையாகவும் இருப்பதற்குப் புரொபசர் ராமமூர்த்தி யவர்களுடைய அறிவும் அனுபவமும் மிகவும் பயன்படு மென்றும், ஷை புரொபஸர் மைஸூரில் புதிய யூனிவர்ஸிடி விஷயமாகத் தேகாப்பியாச போதனைக்குத் தக்கபடி ஏற்பாடுகளை விவரித்திருப்பதும் பிறவும் எடுத்து விளக்கினர். —சுதேசபந்தன்.

நச்சினார்க்கினியர் ஞாபகச் சின்னக் கொண்டாட்டம் முதலியன:— நாம் முன்பு அறிவித்தபடியே டிஸம்பர் 8, 9உகளில் மட்டுமன்றி 10உ விலும் இவை விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. விக்டோரியா எட்வர்ட் ஹாலில் முதல் நாள் கூடிய பெருங்கூட்டத்தில் புதுக்கோட்டை மகாராஜாவின் சோதரரும் பொது நல அபிமானியுமாகிய ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி துரை ராஜா அவர்கள் அக்ராஸநம் வகித்தனர். இக்கொண்டாட்டத்தையும் அது சம்பந்தமான பிற விஷயங்களையும் பற்றிய செய்தி அடுத்த சஞ்சிகையில் வெளியிடப்படும்.

ஓர் உதார நன்கொடை:— ஜீவ காருண்யமும் பொது நலப்பிரியமும் தமிழபிமானமும் வாய்ந்தவரும், மதுரைக் காலேஜை முதல் வகுப்புக் காலேஜ் ஆக்கி எமது வாக்கை நிறைவேற்றிய வித்யாபிமான உதார சீலருமாகிய ஸ்ரீமான் எஸ். ஆர் எம். எம். ஏ. அண்ணாமலைச் செட்டியாரவர்கள், பயிர் கொடுமையால் வருந்தித் தவிக்கும் தென் ஆற்காடு வாசிகளின் பரிதாப நிலைக்கிரங்கி ரூ 1000 நன்கொடை யளித்திருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி எய்தினோம்.

. மதுரை முனிசிபல் மானேஜர் ஸ்ரீ: ஏ. எம். துரைசாமி ஐயர் பி. ஏ. போடி நாயக்கனூர் (சம்பளம் பெறும்) சேர்மனாக அங்குள்ள கவுன்ஸிலர்கள் யாவராலும் ஏகோபித்துத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

—பத்திராதிபர்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்

மனம்போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:— இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பல உபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:—இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக்கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:—இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக் கொள்ளத்தக்க விதத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுவும் வெளிவந்து விட்டது.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பிரம்பூர், சென்னை.

பொருத்தமான ஔஷதம்.

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது யாரா தென்பது கேள்வியல்ல. வரத்தான் செய்யும். அப்படி வருவதும் காலத் துக்குப் பொருந்தி இருக்கிறது.

மெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப் பார்களா? அல்லது எவ்விதவியாதிக்கும் உடனே குணத்தையும் தேசபலத், தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்க நிக்ரஹ மாத்திரை.

களை உபயோகித்து நலம் பெறுவார்களா? என்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடுகளைந்து, மனதுக்கும் தேகத்துக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. அவைகள் ரத்தத்தை சுத்தி செய்து விர்த்தியாக்கி நரம்புஸ்தானங் களை உறுதிப்படுத்தி, புத்தி தீக்ஷணியத்தைக் கொடுத்து, வீரிய ஸ்க லித ரோகங்களைக் குணப்படுத்துகின்றன. இவை தாம் பலத்தைக் கொடுக்கத் தகக திவ்ய மருந்து.

மருந்து செய்வதில் கெடுதி விளைவிக்கக் கூடியவைகள்
ஒன்றும் சேர்க்கப்பட வில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் சரீர சம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு அதை இனா மாய்க் கொடுக்கிறோம்.

அதை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய தவசியம்.

ஒரு பெரிய வேலை.

எந்த உயர்ந்த உத்தியோகத்திலிருந்தாலும கூலிவேலை செய்தாலும் தத்தம் தேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முதல் வேலை யென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
77, மேலக் கோபுரவீதி, மதுரை.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்.